Registered as a Newspaper

Address being changed to the facilities of our customers.
V.T & SONS
QUALIFIED OPTICIANS and DENTIST
317, CLOCK TOWER ROAD, JAFFNA.
(ADJOINING B.M.C)
Manager: Dr. REGI SOLAMAN

# உதயன்

விலை ரூ. 1-50

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

வாடிக்கையாளரின் நன்மைகருதி இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது
வி.ரி. அன் சன்ஸ்
பல்வைத்தியரும் கண் பரிசோதகரும்
317, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(B.M.C க்கு அருகாமையில்)
முகாமையாளர்: Dr. றெஜி சொலமன்

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஸூ பங்குனி மீ 11 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1408 ஷஃபான் பிறை 04 (24 - 03 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:36

### கிழக்கில் சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும்

# ஸ்ரீலங்கா இராணுவம் இனி முழு பாதுகாப்பு

## திருமலையில் வைத்து காமினி மீண்டும் வலியுறுத்து

திருகோணமலை, மார்ச் 24

கிழக்கு மாகாணத்தில் வாழும் சிங்கள மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் இனி, ஸ்ரீலங்கா இராணுவமே முழுப் பாதுகாப்பும் வழங்கும்.

அதனால் அவர்கள் அச்சமின்றியும், நிம்மதியுடனும் வாழக்கூடிய சூழ்நிலை உருவாகும்.

இவ்வாறு காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா மீண்டும் வலியுறுத்திக் கூறினர்.

அமைச்சர் காமினி திஸநாயக்கா நேற்றுத் திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்தார்.

அவர் கடந்த வாரம் புதுடில்லிக்குத் திடீர் விஜயம் செய்து, கிழக்கு மாகாணத்தில் முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரைச் சேவையில் ஈடுபடுத்த இந்தியாவின் அனுமதியைப் பெற்றுவந்தார்.

அதனைத் தொடர்ந்து திருமலைக்கு மேலதிக இராணுவம் இவ்வார முற்பகுதியில் விரையப் பட்டது.

அமைச்சர் காமினி தமது வெற்றிகரமான இந்திய விஜயத்தின் பின்னர், திருமலைக்கு விஜயம் செய்தது இதுவே முதற் தடவையாகும்.

இந்திய அமைதிப்படை கிழக்கில் குடிகொண்டிருக்கும் போதிலும் —

வடக்கு, கிழக்கில் ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகள் முகாம்களில் மட்டும் தங்கி இருக்க வேண்டும் என்று ஜே.

(6-ஆம் பக்கம் பார்க்க]

### எரிபொருள் விலையேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணத்தில் எரிபொருளின் விலை நேற்று மீண்டும் உயர்ந்தது.

கடந்த சில வாரங்களாக லீற்றர் 18 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட பெற்றோல் நேற்று 20 ரூபாவாக உயர்த்தப்பட்டிருந்தது.

இதேபோல் டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றின் விலைகளும் உயர்ந்துள்ளன. (ஒ-10)

### திருமலைக்கு உயர் மட்டக் குழு

கொழும்பு, மார்ச் 24

மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆராய உயர் மட்டக் குழு ஒன்று விரைவில் திருகோணமலை செல்லும் என்று நேற்று கொழும்பில் அறிவிக்கப்பட்டது.

இந்திய அமைதிப் படையின் துணைத் தளபதி மேஜர் ஜெனரல் ஏ. எஸ். கல்கத், இலங்கை இராணுவத் தளபதி நளின் செனவிரத்தின, புனர்வாழ்வு அமைச்சுச் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ ஆகியோர் இக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். (ஒ-எ)

### ஐ.நா ஆணைக்குழுவுக்கு சுவிஸ் தமிழ்ச் சங்கம் கடிதம்

மட்டக்களப்பு, மார்ச் 24

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இந்தியஅரசு சமாதான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வலியுறுத்துமாறு சுவிற்ஸர்லாந்து தமிழ்ச்சங்கங்கள் சம்மேளனம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சம்மேளனம் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:-

ஈழத்தமிழர்கள் பல்வேறு துயரங்களை அனுபவிக்கிறார்கள்.

விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தம், சமாதான பேச்சுக்குத் தயாராகி உள்ளார்கள். எனவே இந்திய அரசு உடனடியாக பேச்சுவார்த்தைகளைத் தொடர வலியுறுத்த வேண்டும்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஒ-21)

### சுபநேரம்

24-03-1988
பங்குனி 11
வியாழக்கிழமை
சுபநேரம்:
7.45 முதல் 9.15 வரை
ராகுகாலம்:
1.45 முதல் 3.15 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
இரவு 2.00 மணிக்கு பேல் அட்டமி

## அமைதிப் படையினரை அதிகரிக்கும் எண்ணம் இல்லை

### தூதுவர் டிக்ஸிற் கொழும்பில் தகவல்

கொழும்பு, மார்ச் 24

இலங்கையில் இந்திய அமைதிப் படையினரின் எண்ணிக்கையை அதிகரிக்கும் எண்ணம் இந்தியாவுக்கு இல்லை.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு ஜே. என். டிக்ஸிற் முன் கண்டவாறு தெரிவித்தார் என்று ஏ. எப். பி பிரெஞ்சு செய்தி நிறுவனம் அறிவித்தது.

இலங்கையில் தற்போது இருக்கும் அமைதிப்படையினரின் எண்ணிக்கை சுமார் 52 ஆயிரம் ஆகும்.

அமைதி ஒப்பந்தத்தைத் தோல்வி காணச் செய்யும் முயற்சி, இலங்கைக்குப் பாதகமாகவே முடியும்.

இலங்கையை ஒன்றுபட்ட நாடாக வைத்துக்கொள்ள ஒப்பந்தமே ஒரே வழி. இந்த ஒப்பந்த அமுலாக்கத்தைத் தமிழரோ அல்லது சிங்களவரோ குழப்பியடித்தால் அதன் பிரதிபலன் துக்ககரமானதாகவே அமையும்.

இப்படி திரு. டிக்ஸிற் சொன்னார் என்று 'ஏ. எப். பி' மேலும் அறிவித்தது. (ஒ-எ)

NOTICE
FREE:- Film Rolls Processing
EACH PRINT:- 4/75
QUALITY:- Guranteed
DELIVERY:- Within 3 to 5 days
SPECIAL CONCESSION:-
- Studios
- Customers of Shabra
Contact:
SHABRA
207, Power House Road,
Jaffna.

### இன்னும் ஊர்ஜிதம் இல்லை

கொழும்பு, மார்ச் 24

அனுராதபுரம் - வவுனியா வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை பஸ் ஒன்று வழிமறிக்கப்பட்டு 17 தமிழர்கள் கொலைப்பட்டதாக அஞ்சப்பட்டது குறித்து நேற்றும் ஊர்ஜிதமான — உறுதியான — தகவல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஐந்து ஆண்டுகளில்

## ஸ்ரீலங்கா படையினர் 500 பேர்களே மரணம்

### ஜனதிபதி சொல்கிறர்

கொழும்பு, மார்ச் 24

கடந்த ஐந்தாண்டுகளில் எமது ஆயுதப் படையைச் சேர்ந்தவர்கள் ஐநூறு பேர் மட்டுமே கொல்லப் பட்டனர். இன்று 6 மாதங்களில் 400 முதல் 500 வரையான இந்திய வீரர்கள் இறந்துவிட்டனர். முதலாம், இரண்டாம் உலக யுத்தங்களுடன் ஒப்பிடும்போது இது சிறிய எண்ணிக்கையே.

இப்படிச் சொன்னர், ஜனாதிபதி ஜெயவர்த்தன.

கொழும்பில் ஐந்து மாடி இராணுவ ஆஸ்பத்திரி ஒன்றை ஜனாதிபதி திறந்துவைத்துப் பேசினர்.

அப்போது அவர் சொன்னதாவது:

இரண்டாம் உலக யுத்தத்தில் பிரான்ஸ் நாட்டில் நடந்த ஒரு நாள் சண்டையில் 60 ஆயிரம் பிரிட்டிஷ் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்று அறிந்தேன். வீரமுடன் போரிட்டவர்கள் அவர்கள்.

1983க்குப் பின்னர் எமது இராணுவம் நான்கு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இப்படி அவர் சொன்னர். (ஒ-எ)

### முச்சந்தி முனி



'அடிமேல்அடி அடிச்சா அம்மியும் நகரும்' என்டது சரிவரும் என்டு கண்டோ அல்லது புதுடில்லி விஜயத்திலை கேட்டது கிடைச்சு விட்டது என்ட சந்தோஷமோ?.. யாருக்குத் தெரியும்....!

# மட்டு.பொலீஸ்நிலையம் மீது நேற்று கிரனேட் வீச்சு!

### இரண்டாவது நாளாகச் சம்பவம்

கொழும்பு, மார்ச் 24

மட்டக்களப்பு பொலீஸ் நிலையம் மீது நேற்று (புதன்கிழமை) அதிகாலை கிரனேட் வீச்சு நடத்தப்பட்டது.

நேற்று இரண்டாவது நாளாக நடந்த இந்தச் சப்தத்தால் மக்கள் பதற்றம் அடைந்தனர்.

இதைத் தொடர்ந்து இலங்கைப் பொலீஸாரும் இந்திய அமைதிப் படையினரும் அந்தப்பகுதியைநோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அப்போது ஆறு சிவிலியன்கள் காயமடைந்தனர் என்று ரய்ட்டர் செய்தி ஸ்தாபனம் நேற்று அறிவித்தது.

இதனிடையில் இந்தச் சம்பவத்தை அடுத்து நேற்று நகரில் சனநடமாட்டம் வழமையைவிடக் குறைவாகவே இருந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு ஆயர் இல்லத்திற்கு அருகில் உள்ள இந்திய அமைதிப்படை முகாம் மீதும் குண்டுவீசப்பட்டது தெரிந்ததே. (ஒ-எ)

## ஜானகி அணியினருக்கு அ.தி.மு.க.தலைமையகம்

### உயர் நீதிமன்றம் தீர்ப்பு

சென்னை, மார்ச் 24

சீல் வைக்கப்பட்ட அ தி மு க. தலைமையலுவலகக் கட்டடத்தைத் திறந்து உபயோகப்படுத்த ஜானகி அணிக்கு சென்னை உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

இது சம்பந்தமான தீர்ப்பை நீதியரசர் கே. பி சேதுராமன் வழங்கினார்.

தலைமை அலுவலகக் கட்டடத்தை ஜானகி அணியினர் பாவித்து வந்த சமயத்தில் ஜெயலலிதா அணி செய்து கொண்ட முறைப்பாட்டின் மீது கட்டிடத்துக்கு சீல்வைக்குமாறு சென்னை மேலதிக நீதிவான் உத்தரவிட்டார்.

இதை எதிர்த்து ஜானகி அணியின் பொதுச் செயலாளர் எஸ். இராகவானந்தம், துணைப் பொதுச் செயலாளர் க. காளிமுத்து ஆகியோர் உயர் நீதிமன்றத்துக்கு முறையிட்டனர்

இதனை ஏற்று உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்

(6 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளுடன் உடன் பேச்சு நடத்துங்கள்

### ராஜீவிடம் ஜெயலலிதா வற்புறுத்து

சென்னை, மார்ச் 24

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை உடனடியாகத் தொடங்கும்படி பிரதமர் ராஜீவ் காந்தியை, செல்வி ஜெயலலிதா வலியுறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அ தி மு க (ஜெ) தலைவி ஜெயலலிதா இத்தகவலை வெளியிட்டார்.

அவர்மேலும் சொன்னதாவது:

இந்திய அரசுடன் பேச்சுக்கள் நடத்த தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக உள்ளனர்

புலிகளின் தலைவரைத் தேடி வேட்டை நடத்துவதை விட்டு அவர்களுடன் பேச்சுக்களைத் தொடக்க பிரதமர் காந்தி முன்வரவேண்டும்.

இப்படிச் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார். (ஒ-எ)

### அடையாளம் தெரியாத 2 சடலங்கள்

அச்செழுப் பகுதியில் புதைக்கப்பட்டு இருந்த இனந்தெரியாத இரண்டு இளைஞர்களின் சடலங்கள் பொதுமக்களால் நேற்று கண்டுபிடிக்கப்பட்டன.

பின்னர் பொதுமக்கள் சடலங்களைத் தோண்டி எடுத்தபோதும் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை என்றும் கூறப்பட்டது. (ஒ-10)

### தீ விபத்தில் 130 பேர் பலி!

பர்மாவில் ஏற்பட்ட தீ விபத்தில் 130 பேர் உயிரிழந்தனர். 20 ஆயிரம்பேர் வீடிழந்தனர்

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த தீ விபத்து குறித்து பிந்திக்கிடைத்த தகவல்களில் இவ்விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. (ஒ-எ)

## ஒப்பந்தத்தை முழுமையாக அமுல் நடத்துவதாக உறுதி

### லோக சபையில் நட்வர்சிங் பதில்

புதுடில்லி, மார்ச் 24

அமைதி ஒப்பந்தத்தை முழுமையாக அமுல் நடத்த இலங்கை அரசு இந்தியாவுக்கு உறுதி அளித்திருக்கின்றது

இப்படி இந்திய வெளியுறவு இணை அமைச்சர் நட்வர்சிங் நேற்று லோக சபையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசின் அமைச்சர்கள் சிலருக்கும் இடையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் இரகசியப் பேச்சுகள் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இணை அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அமைதி ஒப்பந்தத்தின் அடிப்படைக்கு விரோதமான, ஒரு தலைப்பட்சமான சுய நலப்போக்குடனான ஏற்பாடுகள் எதையும் இரு நாடுகளும் ஏற்கமாட்டா என்றும் இணை அமைச்சர் குறிப்பிட்டார். (ஒ-எ)

### கோப்பாயில் சோதனை

இந்திய அமைதிப் படையினர் நேற்று கோப்பாய், நீர்வேலி பகுதிகளில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்

சோதனை நடவடிக்கையின் போது இளைஞர்கள் குறிப்பிட்ட இடம் ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர்

இச்சோதனை நடவடிக்கையின் போது சில இளைஞர்கள் அசௌகரியங்களுக்கு ஆளாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

எனினும் விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்ட அனைவரும் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். (ஒ-10)

## ஜொனி எப்படி சுடப்பட்டார்?

### ஏ.எப்.பி.இப்படிக் கூறுகிறது

கொழும்பு, மார்ச் 24

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனைச் சந்திப்பதற்காக புலிகள் கப்டன் ரஹீமுடன் வந்த இடத்திலேயே ஜொனி சுட்டுக் கொல்லப்பட்டார் என்று ஏ எப் பி செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்திய விமானப்படை விமானம் ஒன்றிலேயே இவர்கள் சென்னையில் இருந்து வவுனியாவுக்கு அழைத்து வரப்பட்டனர்.

புலிகள் இயக்கப் போராளிகளுக்கும் இந்திய அமைதிப் படையினருக்கும் இடையே சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்துக்கு ரஹீமும் ஜொனியும் வந்த சமயம் இருவரும் இடறி விழுந்தவர் என்றும் அச்சமயம் இந்தியப் படையினர் தவறுதலாக ஜொனியைச் சுட்டுவிட்டனர் என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன என்று ஏ எப் பி. அறிவித்தது

இச்சம்பவத்தில் ரஹீ

[6ஆம் பக்கம் பார்க்க]

### ரணில் - டிக்ஸிற் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச்24

தடைப்பட்ட ஜீ சி ஈ சாதாரணதரப் பரீட்சை தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை இந்தியத் தூதுவர் ஜே என் டிக்ஸிற் கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

அப்போது யாழ்ப்பாணம் மாவட்டத்தின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரையும் திரு. டிக்ஸிற் கல்வி அமைச்சரிடம் கையளித்ததாகவும் —

[6ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும் Fudo Enterprises. 39 / 17, 3rd Lane, Power House Road, Jaffna (Near Samy & Co.) (1803)

### சேவை

ELECTRIC COOKERS கிறைண்டேஸ், மின்விசிறி மோட்டர், ரான்ஸ்போமர், றிப்கவிச், சகல மின் உபகரணங்களும் உத்தரவாதத்துடன் திருத்தம் செய்யப்படும். Omaga, ManiPav Road, Jaffna (2088)

### பயிற்சி

Computer பயிற்சிக்கான புதிய பிரிவுகள் 25 - 03 - 1988 காலை 9. 30 மணிக்கு I D P யினால் Modern Education Centre Karaveddy இலும். மாலை 3 30 மணிக்கு I. D. P Telipallai இலும் ஆரம்பமாகின்றன. [2105]

### வாடகைக்கு

உடுவில் மகளிர் கல்லூரியிலிருந்து 300m சுற்று வட்டாரத்தில் மாடி வீடு ஒன்று வடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- திருமதி. லங்காதேவி சிவநாயகம், ''பாக்கிய வாசா'' Campus பின் வீதி திருநெல்வேலி, அல்லது கனகம்மா சின்னையா ''மஞ்சுளா'' ஞானப்பிரகாச வீதி, உடுவில். (2670)

### தேவை

ரியூப் உடைந்த ரெலிவிசன் திருத்த முடியாத ரெலிவிசன், வீடியோ டெக் உடன் தேவை விபரங்கட்கு Jaffna Technical Institute ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம். (2121)

வீட்டில் இருந்து வயது போன நோயாளியை பார்ப்பதற்கு 40 வயதுக்கு மேற்பட்ட பெண் Attendant தேவை. சாப்பாடு தங்கும் இடம் சம்பளம் வழங்கப்படும் அனுபவமுள்ள தாதிகட்கு முன்னுரிமை அளிக்கப்படும். நேரில் தொடர்பு கொள்ளவும். No-12, 8 A தர்பிலேன், வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். (2659)

### மணமகள் தேவை

இந்து மத வேளாள குல பெற்றோர் தமது 30 வயது இங்கிலாந்தில் பொறியிலாளராக தொழில் புரியும் (B Sc. Civl Eng), பிரஜா உரிமை உள்ள மகனுக்கு தகுந்த இடத்தில் மணமகள் தேடுகின்றனர். முழு விபரங்களுடனும் ஜாதகக் குறிப்புடனும் அண்மையில் எடுத்த புகைப்படப் பிரதியுடனும் விண்ணப்பிக்கவும் புகைபடம் திருப்பி அனுப்பப்படும் வி இ 49 C/o உதயன் (2112)

வெளிநாட்டில் தொழில் புரியும் இந்து வேளாள மணமகனுக்கு 36 வயதிற்குட்பட்ட குடும்பப் பெண் தேவை. முதற் கடிதத்தில் எல்லா விபரங்களும் கோரப்படுகிறது. வி இ 98 C/o உதயன், யாழ்ப்பாணம். (2'46)

### வகுப்புகள்

Radio, T V air Conditioning, Refrige Ration வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம் வைண்டிங் Spoken English Typing சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றன. அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall 328, நாவலர் வீதி. (ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம் (2665)

### தவறிவிட்டது

பயிலிட்டி லோகிதா நவமணி என்பவரது பிறப்பு சாட்சிப் பத்திரம், A/L. O/L பத்திரங்கள் பாடசாலை விடுகைப் பத்திரம் என்பன 12-03-88 இல் யாழ் நகரில் தொலைந்து விட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் உண்டு (2133)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள கடைக்குரிய கண்ணாடி அலுமாரி வகைகள் விற்பனைக்குண்டு நகைக் கடைக்கும் ஏற்றது கே. பூம்புகார் கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். (2113)

மாவிட்டபுரம் காங்கேசன்துறை வீதி பெரிய மதவடியில் றோட்டுக்கரைக்காணி 5 பரப்புக் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொழிற்சாலை அமைக்கவோ, வீடு கட்டவோ உகந்தது தொடர்பு: ப வேலுப்பிள்ளை சைவம்கடை. மாவிட்டபுரம். (2651)

பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள (புறொயிலர் குஞ்சுகள் ஏற்கனவே பதிவு செய்தவர்களுக்கு) 25ஆந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். சற்குணராசா & பிறதர்ஸ் பிரம்படி, கொக்குவில் (2106)

Uplands Farm Ltd கோழிக்குஞ்சுகள் 29-03-88 செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும் (Lohmann) பிறவுன் பேடு ரூ 12. 50 [Lohmann]சேவல் ரூ4.00 (சொண்டு வெட்டப்பட்டது, தடுப்பூசி போடப்பட்டது) முற்கூட்டியே பதிவு செய்யவும் இல 9 சூராவத்தை ரோட்டு [நந்தையா வேன்] சுன்னாகம் [ஸ்டேசனுக்கு அண்மையில்] (2655)

கடைகளுக்கு ஏற்ற புதிய கண்ணாடி. சோட்கேசுகள், இருக்கைகள், வீடியோ படப்பிரதிகள், பாட்டுக்கசட்டுக்கள், ஸ்பீக்கர்கள், மின் உபகரணங்கள் விற்பனைக்குண்டு ஞாயிற்றுக்கிழமை வரை பார்வையிடலாம் 9, அரசடி ஒழுங்கை, நெடுங்குளப் வீதி. அரியாலை (2668

Prima Quality Chicks Lohmann வெள்ளை சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் புறொயிலர் குஞ்சுகள், Golden Comets சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், Hy – Line, வெள்ளை சிறுப்பு பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமை, சனிக்கிழமையில் விநியோகிக்கப்படும் உடன் பதிவு செய்யவும்.
Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர். 19. முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (1988)

### விற்பனைக்கு

மலைநாட்டு ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி பொது அறிவு பொது உளச்சார்பு'' வெளியீடு அஸ்ரன் பதிப்பகம் விலை ரூபா 49 90 பூபாலசிங்கம், சிறீலங்கா; சுப்பிரமணியம், புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். (2143)

சிரங்கெண்ணெய் எவ்விதமான செங்கரி சிரங்கையும் துரிதகெதியில் மாற்றும் உத்தரவாத சிகிச்சை நேரில் பெற்றுக்கொள்ளவும். போத்தலுடன் வரவும். விலை ரூபா 15/- வைத்தியர் க. சுப்பிரமணியராஜா மாறுங்கானை, வல்வெட்டித்துறை (2137)

நஷனல் பனசோனிக் கசட்டும் றேடியோவும் (பாவித்தது) விற்பனைக்கு உண்டு 'றட்ணகுலர்ஸ்' 10, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (2666)

# கறுப்பு - மஞ்சள் நிற புதிய இலக்கத் தகடுகளை

## உடனடியாக பயன்படுத்தத்தடை

கொழும்பு, மார்ச் 24
உத்தேச கறுப்பு, மஞ்சள் நிற இலக்க தகடுகளை மோட்டார் வாகனங்களில் உடனடியாகப் பொருத்த வேண்டாம் என்று அவற்றின் உரிமையாளர்களுக்கு பொலிசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் புதியஇலக்கத்தகடுகள் சம்பந்தமான சட்டம் இன்னும் அரசாங்க வர்த்த மானியில் பிரசுரிக்கப் படவில்லை ஆகவே அவற்றைப் பாவிப்பது சட்டவிரோதமானது.

இப்படி போக்குவரத்துப் பொலிஸ் திணைக்கள இயக்குனர் திரு. ரி பேரின்பநாயகம் தெரிவித்தார்.

இதனடையில் புதிய இலக்கத்தகடுகளைப் பயன்படுத்தி வரும் மோட்டார் வாகன உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் பொலிசாரைக் கேட்டுள்ளார்.

### ஊர்காவற்றுறை பிரதேச சபையின் கீழ்

வேலணை, மார்ச் 24
யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் உப அலுவலகங்களான காரைநகர் தெற்கு, வடக்கு, அனலைதீவு, எழுவைதீவு, நாரந்தனை, ஊர்காவற்றுறை பட்டினசபை உப அலுவலகங்கள் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த பிரதேச சபையின் விசேட ஆணையாளராக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் எஸ். எஸ் ஜீவரெத்தினம் கடமையாற்றி வருகின்றார். (இ-167)

### காட்டிக் கொடுத்தகற்கு தண்டனை

தென் இலங்கையில் பல்லவெல என்னும் இடத்தில் ஐம்பது வயதான தாயும் பதினறு வயதுமகளும் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இக்கொலையைப் புரிந்தவர்கள் பின்னர் கார் ஒன்றில் தப்பிச் சென்று விட்டனர்.

காட்டிக் கொடுத்ததற்கு இதுதான் தண்டனை' — என்று எழுதப்பட்ட குறிப்பு ஒன்று உயிரிழந்தவர்களின் சடலங்களுக்கு அருகில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. (ஒ எ)


### யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம் வட்டுக்கோட்டை

ஏப்ரல் மாதம் ஆரம்பமாகும் புதிய வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் மார்ச்மாதம் 30ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**1. Technician Diploma** (N. D. T. Level) **in**
(a) Electrical Power Engineering.
(b) Mechanical Engineering.
(c) Civil Engineering and Quantity Surveying.

காலம்: 2½ ஆண்டுகள் 5 (செமஸ்ரர்கள்)
கட்டணங்கள்: செமஸ்ரர் I ரூபா 2000
செமஸ்ரர் II-V (ஒவ்வொன்றுக்கும்) ரூபா 1200
தகமை: ஆங்கிலத்தில் சித்தியும் கணிதம், விஞ்ஞானம் ஆகிய இரண்டிலும் திறமைச் சித்தி உட்பட க. பொ. த (சாதாரண) இல் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்
வயது/பால்: 21 வயதுக்கு உட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
மொழிமூலம்: ஆங்கிலம்

2. தொழிற் பயிற்சி நெறி
உலோக வார்ப்பு (Foundry Practice)
1 வருடம் 2 செமஸ்ரர்களில் தமிழ்மொழி மூலம் முழுநேர வகுப்புகளாக நடாத்தப்படும்.
கட்டணம்: செமஸ்ரருக்கு ரூபா 600
21 வயதுக்கு உட்பட்ட ஆர்வமுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்பப் படிவங்களை ரூபா 5 செலுத்தி காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.
தெரிவுகள் நேர்முகப் பரீட்சையின் பின்பு நடைபெறும்.
விண்ணப்பங்கள் முடிவடையும் திகதி: 30 - 03 - 1988.

பணிப்பாளர்

யாழ்ப்பாணத்தில் இருந்தே இலங்கையின் பங்குச் சந்தையில் (Share Market) முதலீடு செய்ய
ஓர் அரிய சந்தர்ப்பம்!
வெகு விரைவில் வரவுள்ள இலங்கையின் பிரபல நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு (Invest in Shares) செய்ய விரும்புகிறீர்களா?
தொடர்பு கொள்ளப்படவேண்டியவர்கள்:
Business Promoters [Pvt] Ltd.
எமது சேவைகளிற் சில:
* பங்குகளை வாங்க விற்க ஒழுங்கு செய்தல்.
* காப்புறுதி செய்ய, காப்புறுதி செய்த பணத்தை மீளப்பெற வசதி செய்தல்.
* நிதி முதலீடு தொடர்பான ஆலோசனை.
* நிதி ஆய்கூற்று அறிக்கைகள் தயாரித்தல்.
Business Promoters(Pvt) Ltd.
198, கஸ்தூரியார் வீதி, (மேல் மாடி) யாழ்ப்பாணம்.
குறிப்பு: காலை 10 மணிமுதல் மாலை 2 மணி வரை நிபுணரைச் சந்திக்கலாம்.

பிரதேச உற்பத்திப் பொருட்களுக்கான கூறுவிலை கோரல் - 1988
சபையின் கற்பகம் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்வதற்கு தரமான பிரதேச உற்பத்திப்பொருட்களுக்கு கூறுவிலை கோரப்படுகின்றது. கூறுவிலை பற்றிய முழு விபரத்தையும் விண்ணப்பப்படிவத்தையும் பெற்றுக் கொள்வதற்கு சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர், சந்தைப்படுத்தும் பகுதி, இல. 53, கண்டிவீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் 20-04-1988ஆம் திகதிக்கு பிந்தாமல் தொடர்பு கொள்ளவும்.
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

வின்ஸர் வெண்திரையில்
தினசரி 3 காட்சிகள்
10. 30, 2. 15, 4. 45
CHUCK NORRIS
in
Lone Wolf Macquade
(புதிய வெளியீடு)
பயங்கர துப்பாகிச் சண்டைகள், மர்மம், திகில், விறுவிறுப்பு நிறைந்த வெற்றிச் சித்திரம்
(2133)

விற்பனைக்கு
காங்கேசன்துறை சிமெந்து தொகையாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். தொகையான பைக்கெற்றுகளை கொள்முதல் செய்பவர்களுக்கு இலவசமாக ரான்ஸ்போட் செய்துதரப்படும்.
நிப்பொன் ஹாட்வெயர்
2G, ஸ்ரான்லி வீதி.
கஸ்தூரியார் — ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.


### ஓர் ஆண்டு நினைவஞ்சலி




பேதுருப்பிள்ளை வேதநாயகம்
மலர்வு: 09- 05 1912 — உதிர்வு: 25- 03- 1987

எங்கள் குடும்பத்தின் வழிகாட்டியாய் பாசம் உள்ள தந்தையாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே ஓர் ஆண்டு நீர் எங்களை விட்டுப்பிரிந்தாலும் உமது அன்பான பேச்சும் பண்பான செய்கைகளும் எமது நெஞ்சங்களை விட்டகலா, உணருகிறோம் உருகுகிறோம் தந்தையே எமது உள்ளங்கள் என்றும் உமது நினைவில் வாழும்.

இவரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக 26 03- 88 சனிக்கிழமை காலை 6 00 மணிக்கு இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரி, உற்றார், உறவினர்.
''ஆனந்த வாசா''
இளவாலை. (2120)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் தம்பியப்பா நடராசா
மாநிலத்தில்: 05 - 05 - 1939
நீள்விசும்பில்: 23 02 - 1988

அன்பினிலே இமயமாய்
அணைத் காதரவு தந்ததில்
உவமையே யில்லாத
ஒருவனே யாகி நின்
றுன்னையே எமக்களிக்க
அண்ணலே ஆருயிரே
என்ன தவஞ் செய்துன்னை
அடைந்தோமே காவலனே
இன்னலே யில்லாத
உயர் வாழ்வில் சந்திப்போம்.

மனைவி, மக்கள்.
''முருகவாசா''
நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை. (2132)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி செல்வபூமணி அரியரத்தினம்
மலர்வு: 18 - 11 - 1921
உதிர்வு: 23 - 02 - 1988
(உடுப்பிட்டி)

திருமதி செல்வபூமணி அரியரத்தினம் (இளைப்பாறிய அதிபர் S. R. அரியரத்தினத்தின் பாரியார்)

தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்.

குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்.
உடுப்பிட்டி
24-3-88 [1998]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களை, பொதுமக்களைக்
# கைது செய்வதை நிறுத்துக

## புளொட் கோருகிறது

தாது ஒரு நாள் உண்ணா விரதப் போராட்டம் தொடர்பாக புளொட்டின் அரசியல் கட்சியான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி விடுத்த அறிக்கையில் பின்வரும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன

1. அவசர காலச் சட்டத்தின் கீழும் பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்ட அனைத்து தமிழ், சிங்கள, முஸ்லிம், மலையக அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய். தொடர்ந்தும் இளைஞர்களையும் பொதுமக்களையும் கைது செய்வதை உடன் நிறுத்து

2. ஜனநாயக மரபை மீறிய இராணுவக் குவிப்பையும் வரையறையற்ற அவசரகாலச் சட்டத்தையும் ரத்துச் செய்

3 அவசரகால, இராணுவச் சட்டங்களின் கீழ் மாகாண சபைத் தேர்தல்களை பிரகடனப் படுத்தாதே

4 இயக்கங்களே! இராணுவமே! அப்பாவி பொதுமக்கள், அரச ஊழியர் அலுவலர், ஜனநாயக வாதிகள், மதகுருமார்களை மிரட்டுவதையும், கைது செய்வதையும், கொலை செய்வதையும் உடன் நிறுத்துங்கள் மனிதாபிமான ரீதியில் அம்மக்களை அணுகுங்கள்

5. மக்களின் பாதுகாப்புக்கான ஒரு மாற்றுத் திட்டம் உருவாகும் வரை மக்களுக்கான அத்தியாவசிய தேவைகளை பாதிக்க விடாது குறைந்த பட்சம் கவனிக்கக் கூடிய நிருவாக அமைப்புக்களைச் செயல்பட அனுமதியுங்கள் நிர்வாகிகளை ஆயுதமுனையில் வஞ்சம் தீர்க்காதீர்.

6 அகதிகள் ஆக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்கள் அனைவரையும் குடியமர்த்தி, பொருளாதாரம் காண அனைத்துப் புனர்வாழ்வு அமைப்புக்களையும் நிர்ப்பந்தம் இன்றி செயல்பட அனுமதியுங்கள்.

இப்போராட்டத்திற்கு அனைத்து ஜனநாயக சக்திகளையும் ஆதரவளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

பிரஜைகள் குழு 9 அம்ச ஆலோசனை

# இந்திய அரசு கௌரவம்
# பார்க்கக் கூடாது

## போராளிகளுடன் பேச்சு நடத்த வேண்டும்

கல்முனை மார்ச். 24. இந்திய அரசு கௌரவம் பார்க்காது போராளிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்று அக்கரைப்பற்று பிரஜைகள் குழு கோரியுள்ளது

அம்பாறை மாவட்ட இந்தியப் படைகளின் இணைப்பதிகாரி திரு ரங்கசாமி- லோகநாதனுடன் அம்பாறை மாவட்ட அனைத்துப் பிரஜைகள் குழுக்களின் பிரதிநிதிகளும் சந்தித்து சமாதானம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றை அக்கரைப்பற்று புட்டம்பை இந்தியப்படை முகாமில் நடத்தினர்

கருத்தரங்கில் அம்பாறை மாவட்ட இந்தியப் படைகளின் இணைப்பதிகாரி திரு. ரங்கசாமி லோகநாதன் சுட்டுக் கொல்லப்பட்ட அக்கரைப்பற்று பிரஜைகள் குழுவின் தலைவர் ஜனாப், ஏ. எம் அகமட் லெவ்வை கடந்த வாரம் சுடப்பட்ட கல்முனை பிரஜைகள் குழுத் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகருமான திரு. ஆ வேல்முருகு. கல்முனை பிரஜைகள் குழுப்பிரமுகரும் கல்முனை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருமான திரு. கு. ஏகாம்பரம், புட்டம்பை இந்திய படை முகாமின் பொறுப்பதிகாரி கேர்ணல் எம். சி. நஞ்சப்பா, கல்முனை பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. காசிபதி தெய்வநாயகம் அக்கரைப்பற்று பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. எஸ். ஐ மூர்த்தி. கோமாரி பிரஜைகள் குழுத் தலைவர் டாக்டர் பி. நடராஜன், திரு. டேவிட் ஞானராஜ் (அதிபர்) காரைதீவு பிரஜைகள் குழுத்தலைவர் டாக்டர் எம். ரகுராமன் ஆகியோர் பேசினர்.

கருத்தரங்கில் ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டு அவற்றை அரசு நிறைவேற்றும் பட்சத்தில் அம்பாறை மாவட்ட அனைத்துப் பிரஜைகள் குழுக்களும் ஒன்றிணைந்த போராளிக் குழுக்களை பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்துக்கு வருமாறு அழைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

அக்கரைப்பற்று பிரஜைகள் குழுச்செயலாளர் திரு. எஸ். ஐ. மூர்த்தியால் 9 யோசனைகளும் வாசிக்கப்பட்டு அதன் பிரதியும் இந்தியப்படை இணைப்பதிகாரி திரு ஆர். லோகநாதனிடம் ஒப்படைக்கப்பட்டது.

அந்த 9 யோசனைகளும் வருமாறு:-

★ இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இல்லை. நம்பிக்கையை இந்திய அரசு ஏற்படுத்த வேண்டும்

★ மாகாண சபைகளுக்கு என்ன அதிகாரங்கள் வழங்கலாம் என ஜனாதிபதி அமைச்சர்களிடம் கேட்டுள்ளார். இதிலிருந்து மாகாண சபைக்கு ஒரு அதிகாரம் கூட இல்லையென்ற சந்தேகம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது

★ வடக்கு, கிழக்கு இணைப்புப்பற்றி உறுதியான நிலைப்பாடு இல்லை. கிழக்கை எப்படியும் சிங்கள மாகாணம் ஆக்குவதே அரசின் நோக்கமாகும். இந்த உண்மையை ஒப்பந்தத்தின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் காட்டுகின்றன.

★ பூஸா, பலவத்தை வெலிக்கடை போன்ற சிறைகளில் உள்ளவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படல் வேண்டும்

★ இலங்கை - இந்திய ஒப்பந்தங்களிலுள்ள அம்சங்களை இலங்கை அரசு திருத்தியும், மறுதலித்தும் வருகின்றது.

★ கிழக்கில் புதிய சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறுவது ஒப்பந்த அமுலுக்கு முரணானது.

★ வட, கிழக்கு இணைப்புக்கு கிழக்கில் வாக்கெடுப்பு ஏற்றுக் கொள்ள முடியாதது. 56ஆம் ஆண்டு தொடக்கம் 84 ஆம் ஆண்டு வரையும், இன்றும் கூட சிங்களவர்களைக் குடியேற்றிவிட்டு வாக்கெடுப்பு நடத்தினால் தமிழர் தாயகம் என்று ஒப்பந்தத்தில் கூறுகின்றதற்கு முரணான முடிவுதான் கிடைக்கும்.

★ பூஸாவிலிருந்து விடுதலையானவர்களுக்கு மீள்வாழ்வு.

★ இந்திய அரசு கௌரவம் எதுவும் நோக்காது போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வட கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்தல் வேண்டும்.

(ஓ-84)

இந்திய நாடாளுமன்றத்தில்

# ஜானகி அணியினருக்கு
# சபாநாயகர் அங்கீகாரம்

புதுடில்லி, மார்ச் 23 இந்திய நடாளுமன்ற (லோக்சபா)த்தில் ஜானகி தலைமையிலான அ.தி.மு.க. அணிக்கு சபாநாயகர் பல்ராம் ஜாகர் அங்கீகாரம் வழங்கினார்

இதன் காரணமாக அ. தி. மு. க. ஜெயலலிதா நாடாளுமன்ற அணியின் தலைவராக விளங்கிய திரு பி. குழந்தைவேலு எம்பிக்கு பின்வரிசை ஆசனம் வழங்கப்பட்டது. ஜானகி தலைமையிலான அ. தி. மு க. குழுத் தலைவர் திரு. எஸ். ஜெகத்ரட்சகனுக்கு முன் வரிசை ஆசனம் வழங்கப்பட்டது.

''எனது அணியில் ஏழு எம் பிக்கள் உள்ளனர். திரு ஜெகத்ரட்சகனுக்கு ஏன் முன்வரிசை ஆசனம் வழங்கப்பட்டது. இப்படி ஜெயலலிதா அணி எம். பி. திரு. பி. குழந்தைவேலு சபாநாயகரைக் கேட்டார்.

சபாநாயகர் பதிலளிக்கையில், உங்கள் அணியில் அதிக எம்பிக்கள் இருப்பதை நிரூபித்தால் அங்கீகாரம் தருவேன். ஜானகி அணியின் எம்பிக்கள் என் முன்னே கொண்டு வந்து நிறுத்தப்பட்டனர் என்றார்.

ஜானகிகுழுத் தலைவர் ஜெகத்ரட்சகன் பின்னர் செய்தியாளரிடம் பேசினார்.

''உபசபாநாயகர் தம்பித்துரை தவிர்த்து எனது அணியில் 6 எம்பிக்கள் உள்ளனர்'' என்று அவர் சொன்னார்

பிளவு படாத அ. தி. மு. க எம்பிக்களின் மொத்த எண்ணிக்கை பத்து ஆகும்.

(ஒ-எ)

# இரட்டை இலைச்சின்னம்
## ஜெயலலிதா அணி கேட்கிறது

சென்னை, மார்ச் 23 பிளவுபடாத அ.தி.மு.க. வின் இரட்டை இலைச் சின்னத்தையும் கொடியையும் தங்களுக்கு ஒதுக்கித் தரும்படி ஜெயலலிதா அணி தேர்தல் ஆணையாளரிடம் விண்ணப்பித்துக்கொண்டுள்ளது.


முன்னாள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் இது சம்பந்தமான விண்ணப்பத்தைத் தேர்தல் கமிஷனிடம் சமர்ப்பித்தார்.

அப்போது பிரதம தேர்தல் ஆணையாளர் திரு. ஆர். வி. பெரிசாஸ்திரியிடம் பண்ருட்டி இராமச்சந்திரன் சொன்னதாவது:-

அ தி. மு. கவில் தற்சமயம் உள்ள இரண்டு அணிகளிலும் பார்க்க ஜெயலலிதா அணிக்குத்தான் சட்டசபை உறுப்பினர்களின் ஆதரவும் அமைப்பு ரீதியான பலமும் உண்டு என்பதற்கு தஸ்தாவேஜூபூர்வமான ஆதாரங்கள் உண்டு — என்றார்.

விண்ணப்பம் குறித்து விரைவில் தீர்மானிக்கும் படியும் பண்ருட்டி இராமச்சந்திரன் தேர்தல் ஆணையாளரிடம் கேட்டுக்கொண்டார்.

(ஏ)






★ ஷப்ரு ★

பூலிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் வழங்கும்

# நிலையான முதலீட்டுத்திட்டம்

✯ குறைந்த வைப்புத் தொகை 1000/-
✯ மாதாந்த வட்டி பெற குறைந்த வைப்புத் தொகை 5000/-




| காலம் | மாதாந்தம் | முதிர்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | ---- | 14 வீதம் |
| 6 மாதங்கள் | ---- | 16 வீதம் |
| 12 மாதங்கள் | 16 வீதம் | 17 வீதம் |
| 24 மாதங்கள் | 17 வீதம் | 18 வீதம் |
| 36 மாதங்கள் | 18 வீதம் | ---- |

உங்கள் வசதிக்கேற்ப பின்வரும் வழிகளில் வட்டியினைப் பெற்றுக்கொள்ளலாம்:-
✯ பணமாக ✯ காசோலையாக ✯ வங்கிக் கணக்கூடாக

## நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரி செலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரி செலுத்திய பின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

இயக்குநர் சபை

★ பாலசுப்பிரமணியம், A. I. B (Lon) ★ ஜே. டி நவரட்ணம், A. I. B. (Lon)
★ வி. பி. ஈ. கருணரட்ண, (சட்டத்தரணி) ★ ஆர். பாலசுப்பிரமணியம்.
★ ஓ. சி. எம். ஹசன்பாரி, B.A

மேலும் தகவல்களைப் பெற எமது அலுவலகத்துடன் நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

# ஷப்ரு நிதி நிறுவனம்

61, நியூ புல்லர்ஸ் வீதி, கொழும்பு - 4. தொலைபேசி: 589310, 500576

யாழ். முகவர், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22073


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பல்கலைக் கழக அனுமதிக்கு

# 200க்கு மேல் புள்ளி பெற்றவரிடமிருந்து விண்ணப்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

1987 ஆம் ஆண்டு ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் 200 க்கு மேல் புள்ளிகளைப் பெற்றவர்களிடம் இருந்து பல்கலைக் கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு கோரியுள்ளது.

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பங்களைப் பெறுவதற்கு விண்ணப்பதாரரின் பெயர், விலாசம், தோற்றிய பாடம், சுட்டிலக்கம், பெற்ற புள்ளிகளின் மொத்த திரட்டு, பல்கலைக் கழக அனுமதி, நடைமுறையை விளக்கும் கைநூலைப் பெற விரும்பும் மொழி, வங்கிப் பற்றுச் சீட்டு இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு ஒரு வேண்டுகோள் பத்திரத்தைத் தயார் செய்ய வேண்டும்.

அத்துடன் 35 ரூபா பெறுமதியான "பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு" வுக்கு முகவரியிடப்பட்ட காசுக் கட்டளை அல்லது வங்கிப் பற்றுச் சீட்டைப் பெற வேண்டும்.

இரண்டையும் இணைத்து "செயலாளர், பல்கலைக் கழக மானிய ஆணைக் குழு. இல 20, வார்ட் பிளேஸ், கொழும்பு-7" என்ற முகவரிக்கு ஏப்ரல் 11 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி மேற்படி அனுமதி விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ் வேண்டுகோள் விண்ணப்பத்தை தொடர்ந்து பல்கலைக் கழக மானியக் குழுவினால் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும்.

இவ் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

அதைத் தொடர்ந்து இவ் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு பரீட்சை ஆணையாளரின் திட்டத்துக்கமைவான புள்ளிகளுக்கேற்ப 88/89 கல்வி ஆண்டின் கற்கை நெறிகளுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். (ஒ 9)

---

## வழங்குனரைப் பதிவு செய்தல் - 1988

பனை அபிவிருத்திச்சபைக்கு 1988ம் ஆண்டு பனைசார் உற்பத்திப் பொருட்கள் பிரதேச உற்பத்திப்பொருட்கள் போன்றவற்றைத் தொடர்ச்சியாக வழங்கக் கூடிய வழங்குனர்களிடமிருந்தும், உற்பத்திச் சங்கங்களிடமிருந்தும் வழங்குனர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களைச் சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர், சந்தைப்படுத்தும்பகுதி, இல. 53, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத்திகதி 20 - 04 - 1988.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

---

## கைதிகள் விடுதலையாகலாம்?

கொழும்பு, மார்ச் 24

தென்னிலங்கைச் சிறைக் கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை அரசு விடுதலை செய்யக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைத் தாங்கள் ஏற்பதாகவும் அதன் கீழ் தாங்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் பெரும்பாலான அரசியல் கைதிகள் ஜனாதிபதிக்கு விண்ணப்பித்து இருந்தனர்.

இதனிடையில் விடுதலை செய்யும்படி கோரி 5 தமிழ் அரசியல் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதமிருந்து வருகின்றனர்.

இதேவேளை ஜனாதிபதிக்கு விண்ணப்பித்த கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பாக, அவர்களின் கையெழுத்துக்களைப் பெற சத்தியக் கடதாசிகள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிகின்றது. (ஒ-எ)

---

## Office Assistant Cum Typist

Vacancy exists for the Post of Office Assistant cum Typist, and applicants should be Young girls Who can reasonably converse in English, with at least 2 years recent experience in English typing and be able to work unsupervised

Good salary and Prospects for exceptional applicant.

Canvassing, either directly or indirectly, will disqualify a candidate.

To be considered for this Position, Candidates are invited to write with full Curriculum vitae to:

The Director.
JAFFNA ENGLISH ACADEMY,
9, Rakka Lane, chundikuli,
Jaffna.

---

## புலிகள் மறுப்பு

கொழும்பு, மார்ச் 23

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் திரு. ஆ. வேல்முருகுவின் கொலைக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் பொறுப்பு அல்ல.

இயக்கத்தின் மட்டக்களப்புப் பிரிவு விடுத்த அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ எ)

### வேல்முருகுவின் இறுதிக்கிரியைகள்

கொழும்பு, மார்ச் 24

தமிழர் விடுதலைக் கூட்டணிப்பிரமுகர் ஆ.வேல்முருகுவின் இறுதிக் கிரியைகள் திங்கள் மாலை பாண்டிருப்பில் நடைபெற்றன.

அப்பகுதியில் அன்று ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டது. (எ)

### சூடுபட்ட வான்

கொழும்பு, மார்ச் 24

பன்குளத்தில் இருந்து திருமலை நோக்கி வந்து கொண்டிருந்த வான் ஒன்றே கடந்த ஞாயிறு வெல்கம் விகாரையில் வைத்து இனந்தெரியாதோரின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்கானது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் 18 வயதான மாணவன் பொன்ராஜ் ஜெயராஜ்.

ஜி. சி. ஈ. சாதாரணப் பரீட்சை முடிவை அறிவதற்காக தாயாருடன் வானில் இவர் வந்துகொண்டிருந்தார். (இ-எ)

### ★ தமிழரும் சிங்களவரும் தனித்தனியாக

திருகோணமலை, மார்ச் 24

திருகோணமலைத் துறைமுகத்தில் தமிழ்த் தொழிலாளர்களும் சிங்களத் தொழிலாளர்களும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சிங்களத் தொழிலாளர் கடற்படைத் தளத்தில் உள்ள அகதி முகாமில் இருந்தே வேலைக்கு வந்து போகின்றனர்.

இதே நேரத்தில் திருமலை நகரின் பிரதான வீதிகள், கேந்திர இடங்களில் இந்திய அமைதிப் படையுடன் இலங்கைப் பொலீஸாரும் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். (ஒ-எ)

---

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி தங்கமணி பொன்னுத்துரை**

அன்புடனே எம்மை அரவணைத்த தாயே
பண்புதனை ஊட்டிப் பரிவுடன்
வளர்த்தீரே கனவாக நீங்கள்
கதையான போது கலவான நெஞ்சம்
கண்ணீராற்றுலும் நிலைமாறவில்லை
நினைவாக உங்களை, நிறைவாக
ஏற்றே நெஞ்சாரத் தொழுவோம்
நித்தம் உங்கள் நினைவலே
நிறைவு கொள்வோம் வாழ்க்கையிலே
உங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

(இன்று) 24 - 03 - 1988 இல் அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
பொ. வல்லிபுரம், சுங்க அதிகாரி, வல்வெட்டித்துறை.
(2135)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி. பத்மா இராமநாதன்**

ஓய்வு பெற்ற அதிபர்
இந்து மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்

மலர்வு: 24 - 6 - 1926   உதிர்வு: 5 - 4 - 1987

திதி: 24-3-1988

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த
-மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த
-மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த
-மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது

உள்ளக் கமலத்தை அந்த
உத்தமனுருக்கே சமர்ப்பணமாக்கி
வாழ்ந்த ஒரு நல்லவருக்கு எங்கள்
அஞ்சலி

(1997)   உறவினர், அயலவர்

---

## 180ஆம் நாள் நினைவஞ்சலி



**செல்வன் சுப்பிரமணியம் செல்லப்பாபிள்ளை**

திதி 24 - 03 - 1988

அன்னையின் மடியில்: 24-03-1946
ஆண்டவன் அடியில்: 29 10-1987

எங்கள் அன்பின் விளக்கே
எங்கே நீர் சென்றிட்டாய்?
அச்சாணியாய் இருந்த உங்களை
அகால மரணம் அரவணைத்ததோ
கண்ணீர் விட்டு கதறி அழுகின்றோம்
கடை மாமா, கார் சித்தப்பா, பெரியப்பா
என்று பெருமையுடன் அழைத்த உங்கள்
மங்காத சிரிப்பை இனி எப்போ
காண்போம் உங்கள் ஆத்மா சாந்தியடைய
முருகப்பெருமானை வேண்டுகின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்
அம்மா, சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
மருமக்கள், உற்றார், உறவினர்.
[illegible] (2142)

---

## பிரயாண ஒழுங்குகள்

### Vacancies in Saudi Arabia

| | | | |
|---|---|---|---|
| 1. | AUTO இயந்திர வல்லுநர் | — | 750 SR |
| 2. | கனரக வாகன சாரதிகள் | — | 650 SR |
| 3 | LUBE தொழில் நிபுணர் | — | 750 SR |
| 4 | கனரக சாதன இயந்திர வல்லுநர் | — | 750 SR |
| 5. | மோட்டார் REWIND நிபுணர் | — | 750 SR |
| 6. | AUTO A/C தொழில் நிபுணர் | — | 850 SR |
| 7. | தகர வேலைக்காரர் | — | 700 SR |
| 8 | AUTO மின்சார தொழிலாளி | — | 700 SR |
| 9 | Wheel Balance and Align Specialist | — | 800 SR |
| 10 | வர்ணம் தீட்டுவோர் | — | 650 SR |
| 11. | தட்டு, முட்டு, மெத்தை உறை போன்ற சாதனங்கள் அளிப்பவரின் தொழிளாளி | — | 800 SR |
| 12. | கருவியை அதிகரிக்கச் செய்யும் நிபுணர் | — | 800 SR |
| 13. | [illegible] | — | 650 SR |
| 14. | Plumber (காரியத்திலுல் குழாய்கள், தொட்டிகள் சீர் செய்வர்) | — | 650 SR |
| 15. | Welders | — | 650 SR |
| 16. | கடைச்சல் இயந்திர தொழில் நிபுணர் | — | 700 SR |
| 17. | தச்சு வேலைகாரர் (Carpenters) | — | 650 SR |
| 18. | மேசன் (Masons) | — | 650 SR |
| 19. | இயந்திர பொறியியலாளர் | — | 2200 SR |
| 20. | மின்னியல் | — | 2500 SR |
| 21. | மின் வரைஞர் (Electrical Draughtsman) | — | 1500 SR |
| 22 | Electricians (மின்சார தொழிலாளி) | — | 700 SR |
| 23 | குளிரூட்டியியல் தொழில் நிபுணர் | — | 800 SR |
| 24 | Secretary / Typist | — | 800 SR |
| 25. | Telex Operator | — | 800 SR |
| 26 | தோட்டக்காரர் Gardeners | — | 350 SR |
| 27. | துப்பரவாக்கிகள் | — | 350 SR |

முக்கியகுறிப்பு:-

இவர்கள் யாவரும் 3-4 88 இல் எமது கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் நேர்முகப் பரீட்சை செய்ய சமூகம் அளிக்க வேண்டும். அதன்பின் ஒரு வாரத்தில் பயணம் செய்யலாம் இதற்குத் தேவையானவை பின் வருவன:-

வயதெல்லை 21—50 வரை

1. Pass port கடவுச் சீட்டு
2. மூன்று (3) பாஸ்போட் சைஸ் படம்
3. வேலைசெய்த தொழில் சான்றிதழ்

இவையாவும் கொண்டு உடன் தொடர்பு கொள்ளவும்.

### 2. Kuwait Cleaners 30 KD

Age 18 — 48 வரை

மற்றும் Kuwait, Singapore, Abudhabi ஆகிய நாடுகளுக்குச் செல்வதற்கு பணிப்பெண்கள் (House Maid) தேவை

போக விரும்புவோர் உடன் 1 முழுக் கலர் படம், 3 பாஸ்போட் சைஸ் படத்துடன் தொடர்பு கொள்ளவும். போக விரும்பும் யாவரும் எமது காரியாலயத்தில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

திர்வாகி,

**T. V. TRAVELS**
**BROWN ROAD :: KOKUVIL.**

---

## மக்கள் வங்கி

### அடைவு நகைகள் மீளளித்தல்

1. மக்கள் வங்கி, யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, பிரதான வீதி, காங்கேசன்துறை, சுன்னாகம், சாவகச்சேரி, புங்குடுதீவு, பருத்தித்துறை, வல்வெட்டித்துறைக்கிளைகளில் பணம் செலுத்தி பலாலி, கோட்டை முகாங்களிலிருந்து மீளப்பெறும் அத்தாட்சிக் கடிதங்களை ஏற்கெனவே பெற்ற வாடிக்கையாளர்களினதும்—

2. மக்கள் வங்கி யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, பிரதான வீதி, பருத்தித்துறை, நெல்லியடிக்கிளைகளில் பணம் செலுத்திய வாடிக்கையாளர்களினதும்—

நகைகள் பின்வரும் திகதிகளிலும் இடங்களிலும் வைத்து மீளளிப்பு செய்யப்படும் வாடிக்கையாளர்கள் குறித்த திகதியில் காலை 9-00 மணிக்கு குறித்த கிளையில் தமது அடையாள அட்டையுடனும் வங்கியில் பணம் கட்டிய ரசீது அத்தாட்சிக் கடிதத்துடனும் சமூகமளித்து தமது நகைகளைப் பெற்றுக் கொள்ளவும்.

இது சம்பந்தமாக அடைவு வைத்த கிளைகளிலிருந்து கடிதங்கள் தற்போது அனுப்பப்படுகின்றன யாழ் பிரதான வீதி, யாழ். ஸ்ரான்லி வீதி, பருத்தித்துறை, நெல்லியடிக்கிளைகளில் பணம் கட்டியும் கடிதங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் உடனடியாக கிளைகளுடன் தொடர்பு கொள்ளவும்.

| திகதி | நிலையம் (1) மக்கள் வங்கி பிரதான வீதி | நிலையம் (2) மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி |
|---|---|---|
| 28-3-88 திங்கள் | புங்குடுதீவு நகைகள் யாழ் பிரதான வீதி நகைகள் | யாழ் ஸ்ரான்லி வீதி நகைகள் |
| 29-3-88 செவ்வாய் | சுன்னாகம் நகைகள் | யாழ் ஸ்ரான்லி வீதி நகைகள் |
| 30-3-88 புதன் | சுன்னாகம் நகைகள் | நெல்லியடி நகைகள் |
| 31-3-88 வியாழன் | சுன்னாகம் நகைகள் | நெல்லியடி நகைகள் |
| 4-4-88 திங்கள் | யாழ் பிரதான வீதி நகைகள் | நெல்லியடி நகைகள் |
| 5-4-88 செவ்வாய் | யாழ் பிரதான வீதி நகைகள் | நெல்லியடி நகைகள் |
| 6-4-88 புதன் | யாழ் பிரதான வீதி நகைகள் | பருத்தித்துறை நகைகள் வல்வெட்டித்துறை நகைகள் காங்கேசன்துறை நகைகள் |

மு. கணேசசுந்தரம்
பிரதேச முகாமையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

பொறுமையே தபம். திருப்தியே மகிழ்ச்சி. கருணையே புண்ணியம். இறைவன் நாமமே இன்பம்.

பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா.


# உதயன்

உண்மை - அநுசாரணை - நடு நிலைமை

இல:—292/2 நாவலர் வீதி, தொலைபேசி 21606, 22078
யாழ்ப்பாணம்.
24.03 1988 ச.பெ.இல:-23


## அழுத்தம் கொடுத்தாலென்ன?

கனடாவில் சர்வதேச நாடுகளுக்கு உதவி வழங்குவதற்கென ஒரு நிறுவனம் உண்டு. சர்வதேச அபிவிருத்தி ஏஜன்சி என்ற அந்த நிறுவனத்தின் தலைவியான மார்கிரெட் காட்லி கார்ல்ஸன் கடந்தவாரம் கொழும்பு வந்திருந்தார்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புனர் நிர்மாண வேலைகளைச் செய்வதற்கெனப் பிரஸ்தாப நிறுவனத்தால் ஒதுக்கப்பட்ட உதவித் தொகை இப்போதைக்கு வழங்கப்படமாட்டாது என்று மார்கிரெட் காட்லி அறிவித்து விட்டார்!

அதற்கு அவர் தெரிவித்த காரணம் கவனிக்கப்பட வேண்டியது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்னும் சகஜ நிலை ஏற்படவில்லை. அரசியல் ஸ்திரம் உருவாகவில்லை அப்படி ஒரு நிலை தோன்றிய பின்னரே கனடா வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு, புனர் நிர்மாண, புனர் வாழ்வு வேலைகளுக்கு என்று ஒதுக்கிய நிதி உதவியை வழங்கும். இதுவே அவரது அறிவிப்பு.

ஆண்டுக்கு ஆண்டு, முறைக்கு முறை, தவணைக்குத் தவணை, நாளுக்கு நாள் பல அனர்த்தங்களையும், அழிவுகளையும் கண்டு வருகிறது ஈழத்தமிழர்களின் தாயகமான வடக்கும் கிழக்கும். இது உலகறிந்த உண்மை.

அதனால் தமிழர் தாயகத்தின் புனர் நிர்மாணத்துக்கும், அப்பகுதி வாழ் மக்களின் புனர் வாழ்வுக்கும் உதவப் பல சர்வதேச நிறுவனங்களும், நாடுகளும், தொண்டர் ஸ்தாபனங்களும் விருப்பம் கொண்டுள்ளன அவை எல்லாவற்றுக்கும் கனடா ஒரு முன் மாதிரியாகத் திகழ வேண்டும் என நாம் விரும்புகிறோம்,

பாதிக்கப்பட்ட இரண்டு பகுதி மக்களுக்கும் உதவ வேண்டும். அந்தப் பிரதேசங்களை மீள்விக்க வேண்டும் என்று உண்மையாகவே விரும்பினால், சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் நிச்சயமாகக் கனடாவைப் பின்பற்றியாக வேண்டும்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புகளைக் காட்டி உலக நாடுகளிடமிருந்து இலங்கை அரசு உதவிகளைப் பெற முயற்சிப்பது இயல்பு.

அப்படி உதவிகள் கிடைத்தால் அவை உரிய இடங்களுக்கு வந்து சேருமா என்பது கேள்விக்குரியது 1983 ஆம் ஆண்டின் பின்னர் புனர்வாழ்வு, நிவாரணம் ஆகியவற்றில் வடக்கு, கிழக்கின் பெயரால் பெறப்பட்ட உதவிகள் உரிய அளவுக்கு அந்தப்பகுதிகளுக்கு வந்து சேரவில்லை என்பது பொதுவான குறைபாடு.

ஆகவே வடக்கிலும் கிழக்கிலும் அரசியல் ஸ்திரம் ஏற்பட்டு, அங்கு மக்களாட்சி மலரும் வரை புனர்நிர்மாண வேலைகளைச் செய்வதில் அர்த்தமில்லை.

அதற்காக வடக்கும் கிழக்கும் தொடர்ந்து அழிந்த பிரதேசங்களாக, மேலும் அழியும் பிரதேசங்களாக இருக்க வேண்டும் என்பதல்ல.

இந்த இரு பகுதிகளிலும் நீதியையும் நியாயத்தையும் நிலைநிறுத்தி, தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்து அமைதியையும், சமாதானத்தையும் உருவாக்கி சகஜ நிலையைத் தோற்றுவிக்குமாறு சர்வதேசங்களும், சர்வதேசத் தொண்டர் ஸ்தாபனங்களும், இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும்.

அவ்வாறு தாம் சொல்வதைச் செய்ய மறுத்தால் வழங்கப்படும் பல உதவிகளை நிறுத்த வேண்டி வரும் என எடுத்துச் சொல்ல வேண்டும். அப்போதாவது தமிழர்களின் உரிமைகளை வழங்குவதில்லை என்ற தனது அழுங்குப் பிடியை இலங்கை அரசு தளர்த்துகிறதா என்பதை அவை பரிசீலித்துப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

கனடா உட்பட இலங்கைக்கு உதவி வழங்கும் சகல உலக நாடுகளும் ஸ்தாபனங்களும் தமிழர் பிரச்சினையைத் தாமதியாது தீர்க்குமாறு இலங்கை அரசுக்கு ஓர் அழுத்தம் கொடுத்தால் என்ன?

## புகைத்தல் தடை

### வளர்ச்சியடையும் நாடுகளுக்கு உலக சுகாதாரஸ்தாபனம் வேண்டுகோள்

புகைப்பதற்கு எதிரான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும்படி உலக சுகாதார ஸ்தாபனம் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.

புகையிலை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நாடுகள், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் விற்பனையை அதிகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

இதற்கு காரணம் வளர்ச்சி அடைந்த நாடுகளில் புகைப்பதைத் தடுக்கும் நடவடிக்கைகள் பெரும் வெற்றியடைந்தமையே ஆகும்.

அமெரிக்கா, பிரிட்டன், கனடா ஆகிய நாடுகளில் ஐந்து கோடி ஐம்பது லட்சம் பேர் புகைப்பதை விட்டு விட்டனர்.

ஆண்டு தோறும் 25 லட்சம் பேர் உலகில் புகைப்பதினால் ஏற்படும் நோய்கள் காரணமாக உயிரிழக்கின்றனர்.

இப்படி உலக சுகாதார ஸ்தாபனம் தனது வேண்டுகோளில் சுட்டிக் காட்டியுள்ளது.

# பிலிப்பீன்ஸில் இனப்படுகொலை

### முஸ்லிம் கிளர்ச்சியாளர் அறிவிப்பு

அம்மான், மார்ச் 23 பிலிப்பீன்ஸில் மின்டானோ மாநிலத்தில் மணிலா அரசு இனக்கொலையில் ஈடுபட்டிருக்கிறது.

மொரோ தேசிய விடுதலை முன்னணித் தலைவர் நூர் மிசௌரி அம்மானில் நடைபெறும் இஸ்லாமிய நாடுகளின் மாநாட்டில் முன்கண்டவாறு முறையிட்டார்.

மின்டானோ மாநிலத்தில் வாழும் முஸ்லிம்களுக்குத் தனி நாடு கோரி மொரோ தேசிய விடுதலை முன்னணி ஆயுதக்கிளர்ச்சி நடத்தி வருகின்றது

## பிலிப்பீன்ஸ் இராணுவத்தில் சீர்திருத்தம்!

மணிலா, மார்ச் 23 பிலிப்பீன்ஸ் இராணுவத்தில் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாக ஜனாதிபதி கொரஸோன் அக்கினோ அறிவித்திருக்கின்றார்.

இனிமேல் இராணுவத்தினர் நாட்டின் உட பகுதிகளுக்கு அனுப்பப்படுவர் என்றும் கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிரான யுத்தத்தில் அவர்கள் ஈடுபடுத்தப்படுவர் என்றும் ஜனாதிபதி கொரஸோன் அறிவித்திருக்கின்றார்

இராணுவத்தின் ஆண்டுவிழாவில் பேசுகையில் ஜனாதிபதி கொரஸோன் இத்தகவலை வெளியிட்டார்

ஜனாதிபதியின் அறிவித்தலை இராணுவ வட்டாரங்கள் வெகுவாக வரவேற்றுள்ளன.

திரு. மார்கோஸ் ஜனாதிபதியாக இருந்த சமயத்தில் இராணுவத்தினரின் பெரும்பகுதி மணிலாவில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

சிறிய பகுதியே நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. (எ)

## நூறு பேர் உயிரிழப்பு

தெஹ்ரான், மார்ச் 23 ஈராக்கிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பிரதேசத்தில் ஈரானிய படைகள் இரசாயன ஆயுதங்களைப் பாவித்ததினால் சுமார் 100பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## லைபீரியாவில் சதிமுயற்சி அம்பலம்

மொன்ரோவியா, மார்ச் 23 லைபீரிய ஜனாதிபதியை பதவி கவிழ்க்கச் செய்யும், சதி கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது;

இது சம்பந்தமாக 19 பேர் கைதுசெய்யப்பட்டனர்,

எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் இரத்தம் சிந்தும் புரட்சி ஒன்றின் மூலம் தற்போதைய ஜனாதிபதி பதவிக்கு வந்தார், (எ)

## வெளி உலகில்

# பலஸ்தீனியருக்கு அரபு உலகம் பூரண ஆதரவு வழங்க வேண்டும்

### ஜோர்தான் மன்னர் வேண்டுகோள்

அம்மான், மார்ச் 23 இஸ்ரவேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களில் பலஸ்தீனியர் நடத்தி வரும் கிளர்ச்சிக்கு அரபுஉலகம் முழு ஆதரவு வழங்க வேண்டும்

ஜோர்தான் மன்னர் ஹுசேன் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அம்மானில் கடந்த திங்கள் ஆரம்பமான இஸ்லாமிய நாடுகளின் மாநாட்டில் தொடக்கவுரை நிகழ்த்துகையில் மன்னர் இவ் வேண்டுகோளை விடுத்தார்.

பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காண சர்வதேச மாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்ற யோசனையை ஆதரிப்பதாகவும் மன்னர் ஹுசேன் சொன்னார்.

## பஞ்சாப்பில் முதல்முறையாக ரொக்கட் தாக்கு

புதுடில்லி, மார்ச் 23 பஞ்சாப் மாநிலத்தில் சீக்கியத் தீவிரவாதிகள் நேற்று ரொக்கட் தாக்குதலை முதல் தடவையாக மேற்கொண்டனர் என்று அறிவிக்கப்படுகின்றது

பரா பொலிஸார் தங்கியிருந்த முகாம் ஒன்றின் மீது இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

சீக்கியத் தீவிரவாதிகள் இரண்டு ரொக்கட்டுகளை இம்முகாமின் மீது ஏவினர்.

ஒன்று வெடித்தது இரண்டாவது ரொக்கட் வெடிக்கவில்லை.

வெடித்த ரொக்கட்டினால் பொலிஸ் முகாம் சுவரில் பலத்த சேதம் ஏற்பட்டது எவரும் காயமடையவில்லை. ஓ-எ

# சோவியத் யூனியனில் அஸர்பைஜான் மாநிலத் தகராறு!

### 400 பேர் மீது வழக்குத் தாக்கல்

மாஸ்கோ, மார்ச் 23 சோவியத் யூனியனில் அஸர்பைஜான் மாநிலத்தில் இடம்பெற்ற கலவரங்கள் சம்பந்தமாக 402 பேர் மீது அரசு வழக்குத் தாக்கல் செய்துள்ளது

அஸர்பைஜான் ஆர்மேனியா மாநிலங்களுக்கு இடையே ஏற்பட்ட எல்லைத் தகராறு காரணமாக கடந்த மாதம் இடம்பெற்ற கிளர்ச்சியில் 32 பேர் உயிரிழந்தனர் 197 பேர் காயமடைந்தனர். 20 வாகனங்கள்சேதமடைந்தன 42பேர் கைது செய்யப்பட்டனர். பொது சனச் சட்டத்தை மீறி நடந்ததாக 400 பேர் மீது தற்போது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. (எ)

## ஒரு குழந்தைத் திட்டத்தை மீறிய சீனக்கம்யூனிஸ்ட் அதிகாரி வெளியேற்றப்பட்டார்.

பீகிங், மார்ச் 23 ஒரு குழந்தை பெறும் கொள்கைக்கு முரணாக நடந்ததற்காக சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து உயர் அதிகாரி ஒருவர் வெளியேற்றப்பட்டார்

அவருக்கு 1,760 அமெரிக்க டாலர் அபராதமும் விதிக்கப்பட்டது.

42 வயதான இந்த அதிகாரியின் பெயர் ஷெங் ஹவே.

ஒரு குழந்தை மட்டுமே பெறும் திட்டம் 1978 இல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. அப்போது இவருக்கு மூன்று குழந்தைகள் இருந்தன.

இத்திட்டத்தை அமுல் செய்யும் பொறுப்பு இவரிடம் கொடுக்கப்பட்டது

அதன் பின்னர் இவர் இன்னொரு குழந்தைக்குத் தந்தையானார். ஆனால் அக்குழந்தையை மலைப்பகுதியில் மறைத்து வைத்து இருந்தார். பின்னர் வீதியில் கண்டெடுத்ததாகக் கூறி வீட்டுக்குக் கொண்டு வந்தார்.

அதன் பின்னர் 1986 இல் இன்னொரு குழந்தைக்கு தந்தையானார் இம் முறை அவரின் பாச்சா பலிக்கவில்லை

இதனால் அவர் கட்சியில் இருந்தே வெளியேற்றப்பட்டு விட்டார். (எ)

## ஜனநாயகக் கட்சி வேட்பாளரை தெரிவு செய்வதில் சிக்கல்

நியூயார்க், மார்ச் 23 எதிர்வரும் நவம்பரில் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக யாரை நியமிப்பது?

இது பற்றி ஜனநாயகக் கட்சிக் தலைமைப் பீடத்தில் சிக்கல் ஏற்பட்டுள்ளது

ஜனநாயகக் கட்சி வேட்பாளரைத் தெரிவு செய்யும் பூர்வாங்க தேர்தலில் வேட்பாளராக வர முயற்சிக்கும் எவரும் பெரும்பான்மை வாக்குகளை பெறுகதே இதற்குக் காரணம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது

ஒருபோதாலும் மஸாசுசெட்ஸ் ஆளுநர் மைக்கல் டுகாகிஸ் என்பவருக்கே ஜனநாயக வேட்பாளர் நியமனம் கிடைக்கலாம் என்று நியூஸ்வீக் நடத்திய அபிப்பிராய வாக்கெடுப்பில் தெரிய வந்து உள்ளது. (எ)

## கப்பல்மீது தாக்கு

ஈரானின் பீரங்கிப் படகு வளைகுடாவில் ஜப்பான் எண்ணெய்க் கப்பல் ஒன்றைத் தாக்கியது.

இக்கப்பல் லைபீரியன் தேசியக் கொடியுடன் ஈரானின் எண்ணெய்த் துறைமுகத்துக்குச் சென்றுகொண்டிருந்த போது இப் பீரங்கித் தாக்குதல் இடம்பெற்றது,

## மீன்களுக்குத் தொற்றுநோய்!

டாக்கா, மார்ச் 23 பங்களாதேஷில் ஒரு வித தொற்று நோய் மீன்களைக் கொல்வது கண்டு பிடிக்கப்பட்டது.

ஆறுகள், குளங்களில் காணப்படும் மீன்களில் 80 சதவீதமான மீன் இத் தொற்று நோய் பாதித்துள்ளதாக நிபுணர்கள் தெரிவிக்கிறனர்

# சுப்பிரமணிய சுவாமி கச்சதீவு செல்வதை இந்தியா தடுக்காது

புதுடில்லி, மார்ச் 23 பாக்கு நீரிணையில் உள்ள கச்சதீவுக்கு டாக்டர் சுப்பிரமணிய சுவாமி விஜயம் செய்யலாம். அதனை மத்திய அரசு தடுக்காது.

புதுடில்லி உயர் நீதிமன்றத்தில் மேலதிக செலிசிட்டர்ஜெனரல். குல்திப் சிங் இத்தகவலை வெளியிட்டார்.

கச்சதீவு செல்லதன்னை அனுமதிக்குமாறு டாக்டர் சுப்பிரமணியசுவாமி செய்து கொண்ட மனு உயர் நீதிமன்றத்தில கடந்த வியாழன் விசாரணைக்கு வந்தது. அப்போதே இத்தகவல் வெளியிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து டாக்டர் சுப்பிரமணிய சுவாமி மனுவை வாபஸ் பெற்றார்.

1974 இல் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கைக்கு அமைய இந்தியப் பிரசைகளும் மீனவர்களும் கச்சதீவுக்கு செல்ல அனுமதிக்க வேண்டும் என்று டாக்டர் சுப்பிரமணிய சுவாமி மனுவில் கேட்டிருந்தார்.

சென்ற ஆண்டு மார்ச் 13ஆம் திகதி கச்சதீவுக்குச் செல்ல டாக்டர் சுப்பிரமணிய சுவாமி முற்சித்தார் அப்போது மதுரையில் வைத்து அவரின் பயணம் தடுக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்தே டாக்டர் சுப்பிரமணிய சுவாமி இம்மனுவைத் தாக்கல் செய்திருந்தார். (இ-எ)

## அமெரிக்காவுக்கு சோவியத் வேண்டுகோள்

வாஷிங்டன், மார்ச் 23 ஐ.நா வில் உள்ள பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அலுவலகத்தை மூடிவிடும் போசனையைக் கைவிடும்படி அமெரிக்காவுக்கு சோவியத் யூனியன் வேண்டுகோளை விடுத்திருக்கிறது ஐ.நா வில் உள்ள சோவியத் யூனியன் பிரதிநிதி இந்த வேண்டுகோளை விடுத்தார். (எ)

# கிளிநொச்சி மக்கள் வங்கி அடகு நகைகளும் மீளளிக்கப்படும்

கிளிநொச்சி மார்ச் 24 கிளிநொச்சி மக்கள் வங்கியில் வைத்து நகைகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வங்கி மேலதிகாரிகள் கிளிநொச்சி நகை அடகுவைப்போர் சங்கத்திற்கு அறிவித்துள்ளனர்,

வங்கியிலிருந்து மீட்டுக் கொள்ளும் நகைகள் கிளிநொச்சியிலிருந்து கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்ட நாளிலிருந்து வட்டி அறவிடக் கூடாது எனவும் அடகு வைத்த நாளிலிருந்து இன்றுவரை வட்டியும் முதலும் செலுத்துவதானால் ஏழை விவசாயிகளும் கூலி மக்களும் பெரும் இன்னல்களை எதிர்நோக்க நேரிடும் எனவும்—

இன்று வரை வட்டியும் முதலும் செலுத்த வேண்டுமாயின் அடகு வைத்த நகைகளின் பெறுமதியை விட செலவிடும் பணம் பல மடங்காகி ஏழை மக்கள் நகைகளை மீட்டுக் கொள்ள முடியாது வீணே தமது நகைகளை இழக்க நேரிடலாம் எனவும் கிளிநொச்சி அடைவு வைப்போர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கு வங்கி மேலிடம் 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து பகிரங்க விளம்பரம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவ்விளம்பரத்தில் முதலும் வட்டியும் செலுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளது.

ஆகவே நகை வைத்தோர் இது சம்பந்தமான கருத்துக்களை கிளிநொச்சி அடகு வைப்போர் சங்கத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுள்ளனர். (இ-76)

## அமைச்சரின் செயலாளருக்கு துப்பாக்கிச் சூடு

அமைச்சர் பெர்னாண்டோ மொண்டேகு ஜெயவிக்கிரமாவின் அந்தரங்கச் செயலாளர் திரு. சலுவத்தமீது இனந்தெரியாத நபர்கள் கடந்த திங்கள் இரவு துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்

அவர் காயமின்றித் தப்பினார் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

வெலிசறபட்டினத்தில் அவரின் வீட்டில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது (ஓ எ)



## பொய்யாமொழி

**குறள்:**

வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.

**பொருள்:**

தொழிலில் ... வரை உலகம் கைவிடும்; ... ஒழிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### காங்கேசன் வரும் அகதிகள் தங்க

# நடேஸ்வராக் கல்லூரியில் முகாம் அமைக்கும் வேலை ஆரம்பம்

## நோர்வே சுவீடன் உதவி

பலாலி, மார்ச் 24 இந்தியாவில் அகதிகளாகத் தஞ்சமடைந்து எதிர்வரும் ஏப்ரல் நான்காம் திகதி காங்கேசன் துறை முகம் ஊடாக இலங்கை திரும்பவுள்ள அகதிகள் தங்கிச்செல்வதற்காக சுமார் 8 லட்சம் ரூபா செலவில் முகாம் ஒன்றை நிரந்தரக் கட்டடமாக அமைக்க நோர்வே - சுவீடன் அரசுகள் இணங்கி உள்ளன.

காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரியில் இதற்கான கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு அதிவிரைவாக நடைபெற்றுக் கொண்டிருகின்றன

ஏப்ரல் நான்காம் திகதி காங்கேசன்துறையில் வந்திறங்கவுள்ள அகதிகள் மீளக் குடியமர்த்தும் பணி சம்பந்தமான மகாநாடு ஒன்று கடந்த செவ்வாய்க் கிழமை நடேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்றது மகாநாட்டில் இந்திய அமைதிப் படை அதிகாரிகள் இலங்கை இராணுவ அதிகாரிகள் நோர்வே சுவீடன் நாட்டு அதிகாரிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் கலந்து கொண்டனர்

மகாநாட்டிற்கு யாழ் அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம் தலைமை வகித்தார்.

ஏற்கனவே மன்னார் துறைமுகமூடாக மன்னாரைச் சேர்ந்த அகதிகள் பலர் இலங்கை திரும்பியது தெரிந்ததே.

அவர்களுக்கு ஏற்பட்டது போன்ற அசௌகரிய நிலை இங்கு திரும்பவுள்ளவர்களுக்கு ஏற்படாது பார்த்துக்கொள்வும் மாநாட்டில் பல யோசனைகள் தெரிவிக்கப்பட்டன

நீர் விநியோகம் மின் வழங்கல், சுங்கப்பகுதி குடியகல்வு - குடிவரவுப் பகுதி, சுகாதாரப்பகுதி போன்ற சகல துறை அதிகாரிகளும் மகாநாட்டில் கலந்து கொண்டனர்

அகதிகள் காங்கேசன் துறை வந்திறங்கியதும் உடனடியாக இரண்டாயிரம் ரூபா முதற்கட்ட உதவித் தொகையாக வழங்கப்படும்.

வீடு திரும்பும்போது இரண்டாம் கட்டம் இரண்டாயிரம் ரூபாவும், வீடுகள் பாதிப்படைந்தவர்களுக்கு உடனடியாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

அகதிகளுக்கு ஆறு வாரங்களுக்குத் தேவையான உணவுப்பொருள் வழங்குவதுடன் மொத்தத்தில ரொக்கமாக 25 ஆயிரம் ரூபாவை சகலருக்கும் வழங்குவது என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது மன்னாரில் தங்கியுள்ள அகதிகளது நிலை - அவர்களுக்கு வழங்கப்படும் உதவிகள் - அவர்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் - போன்றவற்றை அறிய அதிகாரிகள் குழு இன்று 24 ஆம் திகதி வியாழக்கிழமை மன்னாருக்குச் செல்லவுள்ளது

அங்கு உள்ள குறைபாடுகள் அறிந்து காங்கேசன் வரும் அகதிகள் நன்கு பராமரிக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதே இவர்களது மன்னார் விஜயத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-119)

## புதிய அமைச்சர்கள்

கொழும்பு, மார்ச் 24 திரு டி. பி. வெலகெதர திட்டமிடல் அமைச்சராகவும் திரு ஜே. எல். சிறிசேன சமூக சேவைகள் அமைச்சராகவும் ஜனாதிபதியினால் நியமிக்கப் பட்டுள்ளனர்.

சேட்டிங் சூட்டிங்ஸ்
* குழந்தைகளுக்கான ஆடைகள்
* சகல விதமான றெடிமேட்
ஆடைகளுக்கும்
யாழ்நகரில்
**மயூரா சென்ரர்**
13 B, நவீனசந்தை, யாழ்நகர்.



# உதயன்

24.03.1988 வியாழக்கிழமை



திருமண வைபவங்களுக்கேற்ற
* மணிப்புரி
* பெனாரஸ்
* காஞ்சிபுரம்
சேலைகளைப் பெற்றுக் கொள்ள
**மயூரா சென்ரர்**
13 B, நவீன சந்தை, யாழ்நகர்.



## விசேட அறிவித்தல்

**வெளிவாரி பட்டமாணிப் பரீட்சைகள் விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது**

G.A.Q (BA) பாடநெறிக்கு பேராதனை பல்கலைக்கழகத்தில் பதிவு செய்வதற்கான விண்ணப்ப முடிவுதிகதி இம்மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

G C E A/L பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் மேற்குறிப்பிட்ட பாடநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

பதிவுகள் அனைத்தும் நிறுவனத்திலேயே செய்து தரப்படும். இதுவரை பதிவு செய்யாதவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

3ஆம் பிரிவிற்கான பயிற்சிவகுப்புகள் ஆரம்பம் 2 - 4 - 88

பதிவாளர்:
**ASTAN INSTITUTE**
166/1 Hospital Road, JAFFNA
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)


## மத்திய கல்லூரி அணி இன்னிங்ஸால் வெற்றி!

— அலுவலக விளையாட்டுச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணிக்கெதிரான சினேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் யாழ் மத்திய கல்லூரி அணி ஒரு இன்னிங்ஸ் 64 ஓட்டங்கள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டி நேற்றும் நேற்று முன் தினமும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் மத்திய கல்லூரி அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றபோது, ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

பி. சயிஸ்நந்தன் - 62, கே விவேகானந்தன் - 52, ஐ. சிவச்சந்திரன் - 42, கே. விக்னேஸ்வரன் - 32 ஆகிய வகையில் ஓட்டங்களைப் பெற்றனர்.

எஸ் ஆர். ரொனி, எம். மலரன்பன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், கே. சுமந்திரன், எஸ் கிருபாகரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மகா வித்தியாலயம் அணி 99 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

எஸ் கிருபாகரன்-21, எஸ் சுரேந்திரன் - 18, எம். நிக்சன் - 13, ஏ. அருட்செல்வன் - 12 ஓட்டங்களைப் பெற்றனர்.

இ. பொன்விலியஸ் 29 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களையும், ஐ. சிவச்சந்திரன் 2 விக்கெட்டுக்களையும், கே விவேகானந்தன், கே விக்னேஸ்வரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு 107 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் மீண்டும் கனகரத்தினம் மகா வித்தியாலய அணி துடுப்பெடுத்தாடியது.

ஆனால் 43 ஓட்டங்களுக்கே தனது சகல விக்கெட்டுக்களையும் இந்த அணி இழந்தது.

எஸ் ஆர் ரொனி 16 ஓட்டங்களைப் பெற்றார்.

பி பொன் விலியஸ் 19 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களையும், பி. சாயிஸ் சந்தன் 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (அ-க)

### ஜானகி--

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ப்பு வழங்கியது

இது சம்பந்தமாக மேலதிக நீதிவான் நடத்திவந்த விசாரணையையும் உயர் நீதிமன்றம் ரத்துச் செய்து விட்டது. [ஒ-எ]

### ஸ்ரீலங்கா - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆர். - ராஜீவ் ஒப்பந்தத்தில் கூறப்பட்ட போதிலும் –

கிழக்கில் ஸ்ரீ லங்கா படைகள் சேவையில் ஈடுபட இருப்பது குறித்து இந்தியா அதிகம் பேசாதிருக்கும் போதிலும் –

அமைச்சர் காமினி இந்தியாவில் இருந்து திரும்பிய பின்னர் அடிக்கடி சிங்கள மக்களுக்கு ஸ்ரீ லங்கா இராணுவம்பாதுகாப்பு அளிக்கும் திட்டம் பற்றியே வலியுறுத்தி வருகிறார்.

அவர் நேற்றுத் திருகோணமலையில் வைத்து பின்வருமாறு தகவல் வெளியிட்டார்:

கிழக்கு. வடமத்திய மாகாணங்களில் உள்ள சிங்கள, முஸ்லிம் கிராமங்களுக்கு இலங்கை இராணுவமே இனி முழுப் பாதுகாப்பு வழங்கும்.

அண்மையில் இந்தியா சென்று பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பேச்சுக்கள் நடத்தியதைத் தொடர்ந்து புதிய பாதுகாப்பு முறைசாத்தியமாயிற்று:

புதிய நடைமுறை விரைவில் நன்மை அளிக்கும்— என்று அமைச்சர் சொன்னார் (அ-எ)

### இன்னும்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதுவும் கிடைக்கவில்லை

அப்படி ஒரு சம்பவம் நடந்ததற்கான எவ்வித துப்போ, தகவலோ தமக்குக் கிடைக்கவில்லை என்று கொழும்பில் பொலீஸ் வட்டாரங்கள் நேற்று காலை தெரிவித்தன.

அநுராதபுரம்-ஹொரவப்பொத்தானை வீதியில் பஸ் மறிப்புச் சூட்டுச் சம்பவம் ஒன்று நடந்ததாக செவ்வாய் காலை முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

அது அநுராதபுரம் – வவுனியா வீதியில் நடந்ததாகத் தகவல் பரவியிருக்கக்கூடும் என்றும்–

ஆனால் செவ்வாய் மாலை வரையிலும், நேற்றுக்காலை வரையிலும் அந்தச் செய்தி குறித்து உறுதிப்படுத்தப்பட்ட தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று—

செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன. (அ)

### ஜொனி---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தப்பிவிட்டார். இப்போது அவர் சென்னைக்குத் திரும்பிவிட்டார்.

ஜொனியின் மரணத்தைச் சென்னையில் தமிழர் வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன.

இராணுவ முகாம் ஒன்றில் சங்கிலி கும்படி ரஹிம் பணிக்கப்பட்டார். காட்டுக்குள் சைக்கிளில் சென்று பிரபாகரனைச் சந்தித்து விட்டு வரும்படி ஜொனியைக் கேட்டுக்கொண்டனர்

ஜொனி திரும்பி வருகையில் தெரிந்து கொண்டே குறி பார்த்துச் சுட்டுக்கொல்லப்பட்டார் இப்படித் தமிழர் வட்டாரங்கள் தெரிவித்தன என்று ஏ. எப் பி. செய்தி ஸ்தாபனம் அறிவித்தது [ஒ-எ]

### ரணில் - - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஏப்ரலில் பரீட்சையை நடத்தமுடியாவிடில் ஜூனிலாவது நடத்தும்படி கேட்டுக்கொண்டதாகவும் தெரியவாகிறது. (ஒ-9)


## பொது மக்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

வண்ணை ஸ்ரீ வீரமாகாளிஅம்மன் ஆலய பரிபாலன சபை 1 4 88 முதல் சகல நிர்வாக நடவடிக்கைகளையும் ஆரம்பிக்கின்றது. எனவே பொதுமக்கள் கோவிலில் அமைந்துள்ள பரிபாலன சபைக் காரியாலயத்தில் தொடர்பு கொண்டு தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

இப்படிக்கு
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய பரிபாலன சபை
நல்லூர்,
யாழ்ப்பாணம் (2125)



## A.A.T. (Sri Lanka)
**June 88 Exam. Stage 1**

விண்ணப்ப முடிவு திகதி 31-03-1988

Registration Form எம்மிடம் உண்டு. நாங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி 27 - 03 - 1988. ஆங்கிலத்திலும் தமிழிலும் Weekend Weekday Classes இப்பொழுது தான் ஆரம்பமாகியுள்ளது மாணவர்கள் இன்னும் சில தினங்களுக்கு அனுமதிக்கப்படுவர்.

**HAVARD INSTITUTE**
SUCCESSORS OF CANTABIA INSTITUTE
SISTER ORGANISATION OF OXONIA INSTITUTE COLOMBO.
13, Rasavinthoddam Lane,
ஸ்ரான்லி ரோட் முடிவுக்கருகாமையில்
JAFFNA.



## MERRI GOLD TOFFEES

தேனிலும் இனிமையும், அருஞ்சுவைகளும் நிறைந்தது
★ MERRI GOLD TOFFEES ★
வானவில்லைப் போன்று ஏழு வண்ணங்களிலும், ஏழு சுவைகளிலும் சுவையூட்டுவது
★ MERRI GOLD TOFFEES ★
எங்கும் கிடைப்பது
★ MERRI GOLD TOFFEES ★
அன்னாசி, ஆரஞ்சு, லெமன்,
Black Current, Peanut, Mint, Strawberry
ஆகிய ஏழு சுவைகளையும்
உங்களுக்குத் தருவது
**Merri Gold Toffees**
விநியோகஸ்தர்களும், கையிருப்பாளர்களும்:
**Present Enterprises**
(2130)



## வேகமாக விற்பனையாகிறது!

# ஆக்கம்

விலை ரூபா: 7/50

பொருளியல், இந்துநாகரிகம், அரசியல், புவியியல், வாத்தகமும் நிதியும் ஆகிய பாடங்களின் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ளது.

யாழ்நகரில் பூபாலசிங்கம் புத்தகசாலையில் மட்டுமே பெற்றுக் கொள்ளலாம்.

வெளியீடு:
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(2128)


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை-பளை கேள்வி அறிவித்தல்

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், 1988ஆம் ஆண்டு சித்திரை மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 1988ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆந் திகதி வரை குத்தகைக்கு விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 29 03 1988 ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரை பச்சிலைப்பள்ளி பிரதேசசபை விசேட ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் யாவும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் கேள்வி வைப்புப் பணம், கேள்விப்பத்திரப்பணம் ஆகியன செலுத்திய தன் பேரில் 28 3 1988 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிவரை வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை 30.3 1988ஆம் திகதி நண்பகல் 12 00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக மூலப் பிரதியை விசேட ஆணையாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, புலோப்பளை, பளை எனவும், இணைப்பிரதியை பி/உ உ ஆணையாளர் உ.உ ஆணையாளர் பணிமனை, யாழ்ப்பாணம் எனவும் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில்இன்ன குத்தகைக்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும் கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் தமது அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல்வேண்டும்.

தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கமைவாக குத்தகை எடுத்து நடாத்துதல் வேண்டும் நிபந்தனைகளைப் பகுதியாகவோ முழுமையாகவோ மீறுமிடத்து எதுவித நட்டஈடுமின்றி குத்தகையை இரத்துச் செய்யும் அதிகாரம் விசேட ஆணையாளருக்கு உண்டு.

வேறு விபரங்கள் எதுவும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல | குத்தகையின் தன்மை | கே.ப. பணம் | கே வை. பணம் | மதிப்பிடப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1. | பளை பொதுச்சந்தை | 25/- | 100/- | 22,000/- |
| 2. | பளை சந்தை மாட்டிறைச்சிக்கடை | 25/- | 100/- | 13,000/- |
| 3. | புதுக்காட்டுச்சந்தி சந்தை | 25/- | 100/- | 500/- |
| 4. | இயக்கச்சி சந்தை | 25/- | 100/- | 5,000/- |
| 5. | இயக்கச்சி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 25/- | 100/- | 2,000/- |

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை பணிமனை,
புலோப்பளை, பளை,
14 3 88.

சு. கந்தசாமி,
விசேட ஆணையாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 24-03-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by NewUthayan Publications (Pvt) Ltd. 292/2 NavalarRoad, Jaffna on Thursday 24th March 1988.


## நீத்தார் பட்டியல்

### திருமதி து, தங்கமுத்து

நெற்கொழு கிழக்கு கொம்மந்துறையைச் சேர்ந்த திருமதி து. தங்கமுத்து அவர்கள் காலமானார். இவர் துரைசாமியின் அன்பு மனைவியும் அருமை குணலிங்கம், தங்கராணி (ஆசிரியை, புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்) அருமை சோதிலிங்கம் காலம் சென்ற மனோமாஸ்டர் (பஞ்சலிங்கம்/பூலோகலிங்கம் (ராஜன். லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவர்.

இவரின் இறுதிக்கிரியைகள் 23-3-88 ல் வரிக்காடு பொதுமயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு
கணவன்-பிள்ளைகள்
தகவல்: து. அருமை குணலிங்கம் (2145)

### கணேசக்குருக்கள் உருக்குமணியம்மா

அராலி தெற்கைச் சேர்ந்த கணேசக் குருக்களின் பாரியார் உருக்குமணியம்மா 18-3-88 வெள்ளிக்கிழமை விடியற்காலை 4 மணியளவில் சிவபதம் அடைந்துவிட்டார். இவரின் தகனக்கிரியைகள் 18-3-88 வெள்ளிக்கிழமை அன்றே அராலி தெற்கில் நடைபெற்றது என்பதனையும், 27-3 88 ஞாயிற்றுக்கிழமை தசாகமும் (கல்லெடுப்பு) தொடர்ந்து மற்றும் கிரியைகளும் நடைபெறும் என்பதையும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்: க கணேசக்குருக்கள்
(2139)

### திரு. சேதர் சிற்றம்பலம்

தும்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த திரு. சேதர் சிற்றம்பலம் (இளைப்பாறிய தபாலதிபர்) 22-03-88 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இளைப்பாறிய தபால் அதிபர் கணபதிப்பிள்ளை சேதர், திருமதி சேதர் சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும், திருமதி பொன்னம்மா அவர்களின் அன்புக்கணவரும், சிதம்பரப்பிள்ளை (Engineer Colombo), தேவகி (Zambia), கேசவன் (Radio Officer - U. K.), ராகவன் (Doctor - Transkei), சுரேந்திரன் (Engineer U. K.) காலஞ்சென்ற பிரபாகரன் (நாதன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், ரூபி, நாகராஜன் Engineer-Zambia), அகல்யாதேவி, மனோகரி (Doctor - Transkei) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய தபாலதிபர்), சாரத்தினம் (Assessor – Income Tax)) சரஸ்வதி ஆகியோரின் அன்புச்சகோதரரும், சிவபாக்கியம், இராஜமாணிக்கம் (Retired R.M.P.), மலர்மகள், சுகிர்தரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, திருமதி தங்கரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகனும், ஜோயல், அன்றா, செந்தூரன், மதிவதனன், கிருஷாந்தன், சமந்தா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"தேவகிரி"
தும்பளை,
பருத்தித்துறை.

தகவல்:
திரு ம உபேந்திரன்
(2152)

### பாலசுப்பிரமணியக் குருக்கள்

காலஞ்சென்ற திரு. செல்லத்துரைக் குருக்களின் மகன் திரு பாலசுப்பிரமணியக் குருக்கள் (முன்னாள் யாழ் இந்து மகளிர் கல்லூரிப் பூசகர்) 23-3-88 அன்று காலமாகிவிட்டார். அன்னார் சிதாலட்சுமியின் அன்புக் கணவரும், கிரிராஜ சன்னிகாம்பிகை. நகுலேஸ்வர ஐயர், வல்லவாம்பிகை ஆகியோரின் தகப்பனாரும், ந. பாலசுப்பிரமணிய சர்மா (மொறீசியஸ்), தாமோதர ஐயர் ஆகியோரின் மாமனாரும், ஸ்ரீவித்தியா தர்சினி, காமகோடிகா, மாரீசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-3-88 இன்று (வியாழன்) 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

20/1 பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பா. நகுலேஸ்வர ஐயர்
[2155]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org